முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.63/2022

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமானந்தம் | தொழில் | : | போதகர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆபேல் | கிராமம் | : | தொட்டிபாளையம் |
| வயது | : | 62 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 15-10-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. தாவாச் சொத்து கடந்த 22.07.1962ம் தேதி அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்திற்காக கிரயம் பெறப்பட்டது என்றால் அது என் தந்தைக்கு தான் தெரியும். இந்த தாவாவில் அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்தை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்தில் நான் பணியாளராக உள்ளேன் என்றாலும் அந்த நிறுவனம் யாரை பணியாளராக நியமிக்கிறதோ அவர்கள் தான் அந்த ஆலயத்தை நடத்த முடியும் என்றால் சரியல்ல. நான் அந்த ஆலயத்தில் பணியாற்றுவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும், தாவா தாக்கல் செய்த எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.15 14:36:05 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.